DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.201/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 07th day of December 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 04** | கிராமம் | : | இராமநாதபுரம் |
| பெயர் | : | பாண்டி | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | வேலுச்சாமி | சமயம் | : | – |
| வயது | : | 58 | ஜாதி | : | – |
| தொழில் | | சிறப்பு சார்பு ஆய்வாளர் | | | |

<u>நாள்: 07.12.2023.</u>

7 ம் எதிரி ஆஜர். 1 முதல் 6, 8,9 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் படி எதிரிகளுக்கு அவர்கள் தரப்பு வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது திருப்புல்லாணி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.திருப்புல்லாணி காவல்நிலைய குற்ற எண். 348/2020 U/s. 147, 294(b), 323, 427, 506(i), 379, IPC & 4 of TNPHW Act ன் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.அர்ஜீனகோபால் மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் திரு.திவாகர் அவர்கள் பணிமாறுதலாகி வேறு காவல் நிலையங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களது கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். இவ்வழக்கின் கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 20.11.2020 ம் தேதி 17.00 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.அர்ஜீனகோபால் அவர்கள் நிலையப் பொறுப்பிலிருந்தபோது அ.சா.1 ரேவதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.348/2020 U/s. 147, 294(b), 323, 427, 506(i), 379, IPC & 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்.

வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். வாதியின் புகார் அ.சா.ஆ.4 ஆகும். பின்பு சம்பவயிடம் சென்று சாட்சிகள் விஜயகுமார், புல்லாணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆகும். அன்றைய தினமே சாட்சிகள் ரேவதி, ஜோதிகுரு, அருண்குரு, அர்புதவாணி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு 1 முதல் 9 எதிரிகளை 23.11.2020ல் எதிரிகளின் வீட்டில் வைத்து கைது செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு முதல் கட்ட விசாரணை முடித்து வழக்கு கோப்புகளை சார்பு ஆய்வாளர் திரு.திவாகர் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். திரு.திவாகர் அவர்கள் வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கில் சேதம் அடைந்ததாக சொல்லப்படும் கல்லின் மதிப்பிற்கு சான்று வழங்கிய விஜயராஜ் என்பவரை விசாரித்து ரசீது பெற்றுள்ளார். அந்த ரசீது அ.சா.ஆ.7 ஆகும். பின்பு அவரது விசாரணையில் இருந்து எதிரிகள் 379 இதச பிரிவின் கீழ் குற்றம் புரியவில்லை என தெரியவந்ததால் மேற்படி சட்டப்பிரிவை நீக்கி தனி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த தனி அறிக்கை அ.சா.ஆ.8 ஆகும். பின்பு அவரது விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு கு.வி:</u>**

சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்ததில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சொன்ன இடத்தில் வைத்து எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

**ம.வி – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.12.07 21:39:42 +0530

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.201/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 07th day of December 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 3** | கிராமம் | : | திருப்புல்லாணி |
| பெயர் | : | புல்லாணி | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | முத்துஇருளாண்டி | சமயம் | : | இந்து |
| வயது | : | 63 | ஜாதி | : | பண்ணையார் |
| தொழில் | : | இரவு காவலர் | | | |

<u>நாள்: 07.12.2023</u>

<u>நேரம்: 11.45 மு.ப</u>

7ம் எதிரி ஆஜர். 1 முதல் 6, 8 முதல் 9 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்கள் தரப்பில் அவரது வழக்கறிஞரால் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இரவு காவலராக வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாது கையொப்பம் என்னுடையது தான். 2,3 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் இருந்தபோது போலிசார் என்னிடம் ஒரு வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். வழக்குப்பற்றி வேறு விபரம் எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி விசாரணையில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அரசுதரப்பில் குறுக்கு**

**விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**<u>அரசுதரப்பு கு.வி.</u>**

கடந்த 20.11.2020 இரவு 06.00 மணியளவில் திருப்புல்லாணி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் சரியல்ல. அதில் நான் மற்றும் விஜயகுமார் முன்னிலையில் பார்வை மகஜரில் கையெழுத்து செய்தோம் என்று போலிசார் விசாரணையில் சொல்லவிட்டு எதிரிகள் தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு கு.வி –இல்லை.**

**ம.வி – இல்லை**

E VIRGIN
VESTA

Digitally signed by
E VIRGIN VESTA
Date: 2023.12.07
21:39:49 +0530